அனுப்புநர்
திரு.ராமகிருஷ்ணன், பி.எஸ்.சி.,
மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும்
பழங்குடியினர் நல அலுவலர்,
மதுரை.

பெறுநர்
1. இணை இயக்குநர்,
கல்லூரி கல்வி இயக்ககம்,
மதுரை மண்டலம்,
பாலம் ஸ்டேசன் ரோடு,
செல்லூார், மதுரை -2.
2. அனைத்து கல்லூரி முதல்வர்கள்,
மதுரை மாவட்டம்.

ந.க.எண்: ஆதி2/1706/2025, நாள்: 16.06.2025.

அய்யா/அம்மையீர்,

பொருள்: ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலம் - கல்வி உதவித்தொகை - 2025-26 ஆம் ஆண்டிற்கான தேசிய வெளிநாட்டு உதவித் தொகை திட்டம் (National Overseas Scholarship) - பழங்குடியினர் மாணாக்கர்கள் விண்ணப்பித்தல் - தொடர்பாக.

பார்வை:
1. சென்னை, பழங்குடியினர் நல இயக்குநரக கடித ந.க.எண்: பமே/ஏ1/3656/2025,நாள்: 21.05.2025.
2. இவ்வலுவலக கடித ந.க.எண்: ஆதி2/1706/2025, நாள்: 30.05.2025.

((()))

பார்வையில் காணும் கடிதத்தில், ஒன்றிய பழங்குடியின அமைச்சகம், 2025-26 தேர்வு ஆண்டிற்கான தேசிய வெளிநாட்டு உதவித் தொகை திட்டத்திற்கு (NOS) இணையவழி மூலம் பழங்குடியின் மாணாக்கர்களிடமிருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன எனவும், முதுகலை நிலை (Ph.D), முனைவர் பட்டம் மற்றும் முதுகலை ஆராய்ச்சி (Post-Doctotal) திட்டங்களில் வெளிநாட்டில் உயர்படிப்பைத் தொடர தேர்ந்தெடுக்கப்பட்ட மாணவர்களுக்கு இந்த உதவித்தொகை வழங்கப்படுகிறதென்றும், இவ்உதவித்தொகைக்கான இடங்களின் எண்ணிக்கை 20 ஆகும். ஆர்வமுள்ள விண்ணப்பத்தாரர்கள் National Overseas Portal-இல் https://overseas.tribal.gov.in/ எனும் இணையவழி மூலம் விண்ணப்பங்களை 15.05.2025 முதல் 30.06.2025 வரை விண்ணப்பிக்கலாம் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே தங்கள் கல்லூரியில் பயிலும் பழங்குடியினர் மாணாக்கர்களுக்கு தகவல் தெரிவித்து, அம்மாணாக்கர்கள் பயன்பெறும் வகையில் இத்திட்டதின்கீழ் விண்ணப்பிக்க தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

இணைப்பு: மேற்சொன்னவாறு

ஒம்/-மு.ராமகிருஷ்ணன்
மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும்
பழங்குடியினர் நல அலுவலர்,
மதுரை.

/உ.ந.உ.ப/

உதவி கணக்கு அலுவலர்

16/6/2025